# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கலாசாரத்திற்கும் அபிவிருத்திக்குமான முஸ்லிம் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(2008 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2008, யூலை மாதம் 25 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

விலை: ரூபா 10.00 தபாற் செலவு: ரூபா 5.00

# 2008 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க. கலாசாரத்திற்கும் அபிவிருத்திக்குமான முஸ்லிம் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஒ. (கூட்) 26/2005

## கலாசாரத்திற்கும் அபிவிருத்திக்குமான முஸ்லிம் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

**முன்னுரை.**

"கலாசாரத்துக்கும் அபிவிருத்திக்குமான முஸ்லிம் மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று, சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புடைய எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட மன்றமானது, எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதிப்பது பொதுமக்களின் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கலாசாரத்துக்கும் அபிவிருத்திக்குமான முஸ்லிம் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

**கலாசாரத்துக்கும் அபிவிருத்திக்குமான முஸ்லிம் மன்றத்தைக் கூட்டிணைத்தல்.**

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கலாசாரத்துக்கும் அபிவிருத்திக்குமான முஸ்லிம் மன்றத்தின் உறுப்பினர்களாக உள்ள அத்தகைய ஆட்களும், இத்தால் உருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகைய வேறு ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யலாம்) "கலாசாரத்துக்கும் அபிவிருத்திக்குமான முஸ்லிம் மன்றம்" என்ற பெயரின் கீழும் பகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை

2 -PL 002865- 1,050 (2008/03)

கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது, அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது, முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாமியக் கலாசாரத்தையும் ஒழுக்க விழுமியங்களையும் மேம்படுத்தலும், இஸ்லாத்தைக் கற்பதனை ஊக்குவித்தலும் ;

(ஆ) குடிபானங்கள், மதுபானங்கள், போதைவஸ்து மற்றும் புகைத்தல் தொடர்பான தீய விளைவுகள் பற்றி முஸ்லிம் இளைஞர்களுக்கும் பொது மக்களுக்கும் அறிவூட்டலும் அவற்றிற்கு அடிமையாவதிலிருந்து முஸ்லிம் இளைஞர்களை விடுவித்தலும் ;

(இ) இலங்கையர்களிடையே தேசிய ஒருங்கிணைப்பு, சமாதானம், இன நல்லிணக்கம், சமூக நீதி மற்றும் தரம் என்பவற்றை மேம்படுத்தலும் முன்னேற்றுதலும்;

(ஈ) பொதுவாக சகிப்புத்தன்மை, எண்ணக்கருவையும் நடைமுறையையும் ஊக்குவித்தலும், முஸ்லிம்கள் மற்றும் இலங்கையில் உள்ள வேறு மத சமுதாயங்களிடையே ஒருங்கிணைப்பை ஊக்குவித்தலும், வேறு மதம் தொடர்பாக முஸ்லிம்களுக்கு கல்வி அறிவூட்டுதலும் ;

(உ) இஸ்லாமிய மார்க்கத்தையும் அரபு மொழியைக் கற்றலையும் மேம்படுத்தல், ஊக்குவித்தலும் ; அத்துடன் மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள் மற்றும் பெண்கள் உரிமைகள் துறைகளில் கற்பதற்கு வசதியளித்தலும் ;

(ஊ) இஸ்லாம் மற்றும் இஸ்லாம் தொடர்புபட்ட பொதுவான கல்வி பற்றிய நூல்கள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சிறு பிரசுரங்களை அச்சிடுதலும், வெளியிடுதலும், விநியோகித்தலும் ;

(எ) இலங்கையிலுள்ளும் அதற்கு வெளியேயும் இவைகளையொத்த குறிக்கோள்களை உடைய ஏனைய மத அமைப்புக்கள் மற்றும் சமூக, இஸ்லாமிய நிறுவனங்களுடன் நட்புறவான தொடர்புகளைத் தாபித்தலும், பேணுதலும் ;

(ஏ) இலங்கையின் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் கல்வி, சேமநல செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக உழைத்தலும்.

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், 6 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய முகாமைச் சபையினால் நிருவகிக்கப்படல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற கலாசாரத்துக்கும் அபிவிருத்திக்குமான முஸ்லிம் மன்றத்தின் முகாமைச் சபையாதல் வேண்டும்.

(3) முகாமைச் சபையின் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும் சபைக்குக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் பயனுள்ள உறுப்பினரைக் கூட்டிணைத்தலும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைய சபையின் எவரேனும் உறுப்பினரை இறப்பினால், பதவி விலகலினால் அல்லது பதவி அகற்றுவதினால் ஏற்படக்கூடியவாறான ஏதேனும் வெற்றிடத்தை நிரப்புதலும் முகாமைச் சபைக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

5. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும். கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், நடாத்துதல், முடிவுறுத்தல் என்பவற்றையும் மற்றும் பிணைப் பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப்பின்றியோ கடனெடுத்தல் அல்லது பணம் திரட்டுதல், நன்கொடைகள் பெறுதல், நிதிகள் திரட்டுதல், நிதிகளைச் சேகரித்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும், வேலையில் ஈடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து அவர்களை நீக்கல் என்பவற்றுக்கான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) காலத்துக்குக்காலம், கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு, பின்வரும் விடயங்களுக்காக இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குவது, கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பினர்களைச் சேர்த்தல், உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், மீளப்பெறுதல் அல்லது உறுப்பினர்களை வெளியேற்றுதல் ;

(ஆ) முகாமைச் சபையின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் அவர்களுடைய தத்துவங்களும், முகாமைச்சபை உறுப்பினர்களின் கடமைகளை நடாத்துதல் ;

(இ) பதவிதாங்குநர்களைத் தெரிவுசெய்தலும், அவர்களுடைய பதவிக்காலமும், பதவிதாங்குநர்களை பதவி விலக்குதலும், அல்லது பதவி வறிதாதல் அல்லது பதவியிலிருந்து அகற்றுதல் அத்துடன் கடமைகளை நடாத்துதலும் ;

(ஈ) முகாமைச்சபையின் கூட்டத்திற்கு அழைப்புவிடுவதிலும், நடாத்துவதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதன் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நிதியங்களையும் சொத்துக்களையும் நிர்வகித்தலும் முகாமைசெய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் ஏதேனும் விதியானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாது ஒழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

7. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுவதற்குரிய ஒப்பப்பணங்கள் உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படற்பாலனவும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.*

8. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, அழிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக்கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி இயலுமானதாகவும், ஆற்றலுடையதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் அவற்றை ஈடுவைக்க, விற்க, குத்தகைக்கு கொடுக்க, கொடுத்து மாற்ற, அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுமான முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய அச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படல்வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

9. கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாத் தனிகடன்களும் பொறுப்புக்களும்செலுத்தித்தீர்க்கப்பட்டதன் பின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அல்லது உடையனவும் ஏதேனும்

*கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.*

வருமானத்தை அல்லது ஆதனத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுவதினின்று அதன் அல்லது அவற்றின் விதிகளால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டவையுமான ஏதேனும் வேறு நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப் படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**10.** (1) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும். *கணக்குகளும் கணக்காய்வும்.*

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் முகாமைச்சபையினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத் தின் தவிசாளர், கௌரவ செயலாளர் அல்லது கௌரவ பொருளாளரின் முன்னிலையிலன்றி, எத்தன்மைத்தான எச்சாதனத்திலும் இடப்படலாகாது. அத்துடன் அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு கையொப் பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்ப மிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது. *குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணுதல்*

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387 : (வெளிநாடு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்